தி/தி/ நிலாவெளி கைலேஸ்வரா கல்லூரி

இரண்டாம் தவணைப் பரீட்சை - 2024

| | | |
|---|---|---|
| தரம் -08 | கத்தோலிக்க திருமறை | நேரம்:2.00 மணித்தியாலம் |
| | சுட்டெண்:………………………………………………... | |

**01. பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக**

1. இயேசு நசரேத்துார் செபக்கூடத்தில் வாசித்த ஏட்டுச்சுருள் யாருடையது.

   1. எசாயா 2. எரேமியா 3. யோனா 4. ஆமோஸ்

2. பழைய ஏற்பாட்டின் உன்னத குருவாகவும் அப்பமும் திராட்சை இரசமும் கடவுளுக்கு காணிக்கையாகக் கொடுத்தவர்.

   1. ஆபிரகாம் 2. ஈசாக் 3. மெல்கிசெதேக் 4. சக்கரியா

3. சாவான பாவம் செய்திருந்தால் ஒருவர் உடனடியாகப் பெற வேண்டிய அருளடையாளம்.

   1. நோயிற்பூசுதல் 2. நற்கருணை 3. திருமுழுக்கு 4. ஒப்புரவு

4. “இயேசுவே உன்னத கடவுளின் மகனே உமக்கு இங்கு என்ன வேலை?” எனக் கேட்டவர்.

   1. பேதுரு 2. பேய்பிடித்தவர் 3. பரிசேயர் 4. இலாசர்

5. “கடவுள் நம்மோடு” எனப் பொருள்படும் பெயர்.

   1. இம்மானுவேல் 2. யாவே 3. எப்ராயிம் 4. இயேசு

6. இறுதித் தீர்ப்பின் போது நேர்மையாளர்களையும் தீயோரையும் பிரிததெடுத்து தீர்ப்பு வழங்குவார் எனக் கூறும் உவமை.

   1. நல்ல சமாரியர் உவமை 2. கடுகு விதை உவமை
   3. வலை உவமை 4. முத்து உவமை

7. துாய ஆவியானவரை அடையாளப்படுத்துபவை.

   1. மேகம், கழுகு 2. நீர், மரம் 3. புறா, நெருப்பு 4. காற்று, ஒலி

8. உறுதிப்பூசுதல் எனும் அருளடையாளத்தை வழங்குபவர்.

   1. திருத்தொண்டர் 2. ஆயர் 3. அருட்சகோதரி 4. குருவானவர்

9. முதிர்ச்சி பெற்ற கிறிஸ்தவனாக முழுமை பெற அழைக்கும் அருளடையாளம்.

   1. திருமணம் 2. குருத்துவம் 3. ஒப்புரவு 4. உறுதிப்பூசுதல்

10. கத்தோலிக்க திருவழிபாட்டின் மையமாக இருப்பது.

    1. திருப்பலி 2. திருப்புகழ் மாலை 3. அருளடையாளங்கள் 4. திருவிவிலியம்

11. இயேசுவின் போதனையினதும் செயலினதும் மையமாக உள்ளது.

    1. அன்பு 2. தியாகம் 3. கீழ்ப்படிவு 4. இறையாட்சி

12. இயேசுவைப் பாலைநிலத்திற்கு அழைத்துச் சென்றது.

1. அலகை 2. தூய ஆவி 3. வானதூதர் 4. சீடர்கள்

13. திருமுழுக்கு யோவானைக் கொலை செய்தவர்.

1. நிக்கதேம் 2. ஏரோது அக்கிரிப்பா 3. ஏரோது அந்திபஸ் 4. பிலாத்து

14. திருமுழுக்கு யோவானின் பிறப்பு செய்தி முதல் முதலில் அறிவிக்கப்பட்டவர்கள்.

1. எலிசபெத், யோசேப்பு 2. மரியா , இயேசு
3. வானதூதர், சிமியோன் 4. செக்கரியா , மரியா

15. ''தியோபில்'' என்ற பெயரின் அர்த்தம்.

1. மேன்மையானவர் 2. கடவுளின் தூதர் 3. கடவுளின் நண்பர் 4. நேர்மையாளர்

16. ''ஒடுக்கப்பட்டவர்களின் நற்செய்தி'' என அழைக்கப்படும் நற்செய்தி.

1. மத்தேயு நற்செய்தி 2. லூக்கா நற்செய்தி 3. யோவான் நற்செய்தி 4. மாற்கு நற்செய்தி

17. தூய ஆவியின் கனிகளில் ஒன்று.

1. பரம அன்பு 2. தூய்மை 3. பிறர் சிநேகம் 4. மன்னிப்பு

18. இயேசு யாருடைய மகளை உயிர்ப்பித்தார்.

1. இலாசரின் 2. சக்கேயுவின் 3. யாயீரின் 4. ஏரோதின்

19. புதிய ஏற்பாட்டில் நற்கருணைக்கு முன்னடையாளமாக இருப்பது.

1. கானாவூர் திருமணம் 2. அப்பங்களைப் பெருகச் செய்தல்
3. பத்துக்கட்டளைகளை வழங்கல் 4. சிலுவையில் பலியாகுதல்

20. அமைதியின் புதல்வர் என அழைக்கப்படுபவர்.

1. திருமுழக்கு யோவான் 2. எசாயா 3. இயேசு 4. யோவான்

(20x1=20 புள்ளிகள்)

## 02. இடைவெளி நிரப்புக.

( அப்பா தந்தை, மன்றாட்டு , மன்னா, தியாகம் , பெந்தகோஸ்து, திருத்தூதர் பணிகள் , அருட்பொழிவு, ஆன்மீக ஆயத்தம், உண்மை, சக்கேயு )

1. ''ஆண்டவருடைய ஆவி என்மேல் உள்ளது. ஏனெனில் அவர் எனக்கு ……………………………..செய்துள்ளார்''.

2. இறையரசை உரிமையாக்கிக் கொள்ள எமக்குச் சொந்தமான அனைத்தையும் ……………………… செய்ய வேண்டும்.

3. ……………………………………… என்பது பாவத்திலிருந்து விடுபடுதலாகும்.

4. திருத்தூதர்கள் மேல் தூயஆவியார் ……………………………………….. அன்று வந்திறங்கினார்.

5. உறுதிப்பூசுதல் மூலம் ………………………………… என அழைப்பதற்கு தகுதியைப் பெறுகின்றோம்.

6. பாலைநிலத்தில் பசியால் வாடிய இஸ்ரயேல் மக்கள் …………………………… எனும் உணவால் போஷிக்கப்பட்டனர்.

7. ………………….. என்பது மனச்சான்றுக்கு ஏற்ப செயற்படுவதாகும்.

8. “செக்கரியா அஞ்சாதீர், உமது ……………………………..கேட்கப்பட்டது”.

9. லூாக்கா நற்செய்தியின் இரண்டாம் பாகமாக ……………………………… காணப்படுகின்றது.

10. உரோமைய அரசருக்காக வரி தண்டுபவராக ………………………….. கடமையாற்றினார்.

(10x1=10 புள்ளிகள்)

## 03. சுருக்கமான விடை தருக.

1. புதுமை என்றால் என்ன?
2. இறையாட்சி பற்றி கூறும் உவமைகள் இரண்டு தருக?
3. நாசரேத்தூர் சுருளேட்டின் படி இயேசுவின் பணிகள் இரண்டை எழுதுக?
4. நற்கருணையின் சிறப்பியல்புகள் இரண்டு தருக?
5. இறுதி இராவுணவின் போது ஏற்படுத்தப்பட்ட அருளடையாளங்கள் எவை?
6. நற்கருணையைப் பெற முன் செய்யப்படும் ஆயத்தங்கள் இரண்டும் எவை?
7. லூாக்கா நற்செய்தியில் குறிப்பிடப்படும் பெண்கள் இருவரைத் தருக?
8. தூய ஆவியின் கனிகள் நான்கை எழுதுக?
9. உறுதிப்பூசுதலைப் பெற தேவையான தகுதிகள் இரண்டை தருக?
10. தூய ஆவியின் கொடைகள் மூன்றை தருக?

(10x2=20 புள்ளிகள்)

## 04. சந்தர்ப்பம் கூறுக.

1. “அருள் மிகப் பெற்ற மரியே வாழ்க, ஆண்டவர் உம்முடனே”

யாரால் :………………………………………………………..

யாருக்கு: ………………………………………………………

2. “இக்குழந்தையின் பெயர் யோவான்”

யாரால் :………………………………………………………..

யாருக்கு: ………………………………………………………

(5+5= 10 புள்ளிகள்)

## 05. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

01. 1. திருமுழுக்கு யோவான் அறிவுரை வழங்கிய இரு குழுக்களைப் பெயரிடுக.

2. திருமுழுக்கு யோவானின் வாழ்விலிருந்து உமது வாழ்வுக்குக் கிடைக்கும் படிப்பினைகள் ஐந்தை எழுதுக?

(3+5= 8 புள்ளிகள்)

02. 1. இயேசுவின் புதுமைகளின் வகைகளை குறிப்பிடுக.

2. இயேசுவின் புதுமைகளினூடாக வெளிப்படும் விடயங்கள் நான்கை தருக.

(3+5= 8 புள்ளிகள்)

03. 1. விதைப்பவர் உவமையில் விதைகள் விழுந்த இடங்களை தருக.

2. பின்வரும் உவமைகளில் ஒன்றை எழுதுக.

வலை உவமை நல்ல சமாரியன் உவமை புதையல் உவமை

(3+5= 8 புள்ளிகள்)

04. 1. இயேசு முகங்கொடுத்த சோதனைகள் இரண்டை தருக.

2. திருமுழுக்கின் உமக்கு கிடைத்த இறைவாக்கு பணியை நிறைவேற்ற நீர் செய்யக் கூடிய செயல்கள் ஐந்து எழுதுக.

(3+5= 8 புள்ளிகள்)